## திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்:- திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப.,

ந.க.எண். உ5/ 21097 /2020 நாள்: 10.09.2020.

பொருள் :- பேரிடர் மேலாண்மை - இயற்கை இன்னல்கள் - வடகிழக்கு பருவமழை 2020 வெள்ளம் தொடர்பான பணிகளை மேற்பார்வையிட மாவட்டம், கோட்டம் மற்றும் வட்ட அளவிலான கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்து உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :- கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை NC 1(4) / 1875 / 2020 நாள் 26.08.2020.

****************

**ஆணை:-**

திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 2020 தொடர்புடைய பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்டம், கோட்டம் மற்றும் வட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்து உத்திரவிடப்படுகிறது.

**மாவட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்கள்**

| | |
|---|---|
| 1. | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருநெல்வேலி.<br>தொலைபேசி எண்: 9445000928 |
| 2. | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>திருநெல்வேலி.<br>தொலைபேசி எண்: 9443285614 |

**கோட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | சேரன்மகாதேவி கோட்டம் | சார் ஆட்சியர், சேரன்மகாதேவி<br>தொலைபேசி எண்: 9445000477 |
| 2. | திருநெல்வேலி கோட்டம் | உதவி ஆட்சியர், திருநெல்வேலி<br>தொலைபேசி எண்: 9445000476 |

Scanned by CamScanner

## வட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்கள்

| வ.எண் | வட்டத்தின் பெயர் | பகுதி கண்காணிப்பு அலுவலர்கள் |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி | உதவி ஆட்சியர், திருநெல்வேலி |
| 2. | பாளையங்கோட்டை | ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி |
| 3. | மானூர் | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல அலுவலர், திருநெல்வேலி |
| 4. | சேரன்மகாதேவி | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், திருநெல்வேலி. |
| 5. | அம்பாசமுத்திரம் | உதவி ஆணையர் (கலால்) திருநெல்வேலி. |
| 6. | நாங்குநேரி | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருநெல்வேலி. |
| 7. | இராதாபுரம் (வள்ளியூர், பணகுடி, பழவூர்) | சார் ஆட்சியர், சேரன்மகாதேவி. |
| 8. | இராதாபுரம் (லெவிஞ்சிபுரம், சமூகரெங்கபுரம், இராதாபுரம்) | தனித்துணை ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம்), திருநெல்வேலி |
| 9. | திசையன்விளை | மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. |

மேற்கண்ட துணை ஆட்சியர்கள் தங்களது வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை 2020 தொடங்குவதை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதும் கூட்டம் நடத்துவதும், தணிக்கை செய்வதும், ஆய்வு செய்வதும், முதல்நிலை மீட்பாளர்கள் (First Responders), காவல் துறை மற்றும் தீயணைப்பு துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து ஒத்திகை பயிற்சி மற்றும் வட்ட அளவிலான ஒருகிணைந்த அலுவலர்களின் கூட்டம் நடத்திடவும், மேலும் மிகஅதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள், அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் (Very Highly Vulnerable, High Vulnerable) பகுதிகளை அவ்வப்போது ஆய்வு செய்தும் வெள்ளம் மற்றும் இதர பாதிப்புகள் ஏற்படும் காலங்களில் உரிய நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் நேரில் எடுத்திடவும் அவ்வப்போது நிலை குறித்து அறிக்கை செய்திடவும் வடகிழக்கு பருவமழை 2020 -ன் போது ஏற்படும் கால்நடை சேதம், வீடு சேதம், பயிர்சேதம், மனித உயிரிழப்பு சம்பந்தமான அறிக்கைகளை தினசரி மாலை 3.00

Scanned by CamScanner

மணிக்குள் அறிக்கையாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும் சம்பந்தப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாணை உடன் அமலுக்கு வருகிறது.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/9/2020

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
திருநெல்வேலி

பெறுநர்:

சம்பந்தப்பட்ட நபர்கள்

நகல்: சார் ஆட்சியர் சேரன்மகாதேவி.

நகல்: உதவி ஆட்சியர் திருநெல்வேலி.

நகல்:அனைத்து வட்டாட்சியர்கள்

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முகாம் உதவியாளர், திருநெல்வேலி.

நகல்: மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் முகாம் உதவியாளர், திருநெல்வேலி.

நகல்: முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை - 600 005. (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

Scanned by CamScanner